**தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்டோபர் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளது உறுதியான தன்மை, கணக்கீடு மதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களது கட்டமைப்பும் உள்ளடக்கமும் தொடர்பாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலும் சம்பவங்களும் நியாயமாக உள்ளடங்கி உள்ளதுடன் வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டு மொத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டும் உள்ளன.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கொப்பாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மீண்டுவரும் செலவினம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினது இறுதிக் கணக்குகளில் 1701 ஆம் இலக்க செலவினவிடயத்தின் (இழப்புக்களும் பதிவழிப்பும்) கீழ் ரூபா 73,661 செலவு ஏற்பட்ட போதும், மீண்டுவரும் செலவினப் பேரேட்டில் அது பதிவு செய்யப்படவில்லை. | மீண்டுவரும் செலவினம் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | மீண்டுவரும் செலவினம் பேரேட்டில் உள்ளடக்கப்படவில் லை. |
| (ii) | மீளாய்வாண்டில் 2 கதிர்காம இளைப்பாறு மண்டபங்களது பராமரிப்பின் போது நீருக்கும் மின்சாரத்துக்கும் மாத்திரமே ரூபா 602,066 செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒரு இளைப்பாறு மண்டபத்தின் மூலம் வருமனானம் எதுவும் கிடைத்திராததுடன், மற்றைய இளைப்பாறு மண்டபத்தின் மூலம் | திணைக்களத்திற்கு நட்டம் ஏற்படாதவாறு நலனோம்பல் பணி நடைபெற வேண்டும். | கதிர்காமம் இளைப்பாறு மண்டபம் பழுது பார்க்கப்படுகின்றது. |

ஆண்டின் போது ரூபா 383,900 மாத்திரமே வருமானமாகக் கிடைத்திருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான கணக்கிணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 1,346,632 கடன் நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையுடைய சேவை நீங்கிய 2 பதவியணியினரிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இடர்க் கடனாக ரூபா 30,000 அறவிடப்பட வேண்டியிருந்தது. | கடன் நிலுவையைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக்கடன் மீதியை அறவிடவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(இ) சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிதிச் சார்பற்ற சொத்துக்கள் கணக்கிலிடப்படும் போது முன்னைய ஆண்டின் இறுதி மீதி சீராக்கல் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி இனங்காணப்பட்டிருந்தது. எனினும், அச்சீராக்கலுக்கான முன்னைய ஆண்டினது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,000,181 இனால் அதிகரித்திருந்தது. | கணக்காய்வு செய்யப்பட்ட சரியான மீதி முன்கொண்டு வரப்பட வேண்டும். | அலுவலக உபகரணம் மற்றும் வீட்டுத் தளபாடக் கணக்குகளுக்கிடையே பெறுமதி மாற்றம் ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திணைக்களம் 03 இளைப்பாறு மண்டபங்களையும் வாகனத் தரிப்பிடம் ஒன்றையும் நிர்மாணித்திருந்த போதும், அவற்றுடன் காணியும் சுவீகரிக்கப்பட்டிருக்காததுடன் அச்சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் எதுவும் வெளிப்படுத்தப்படவுமில்லை. | சொத்துக்களது உரித்தைத் தீர்வு செய்ய வேண்டும். | நிர்மாணிக்கப்பட்ட வற்றுக்கு உரிய காணி திணைக்களத்துக்குச் சொந்தமானதல்ல. அவற்றைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2019 மார்ச் 19 ஆந் திகதிய அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தின் பிரகாரம் 2019 மே 31 அன்று திணைக்களத்திற்குச் சொந்தமான ஏறக்குறைய ரூபா 3,580,000 பெறுமதியான 03 வாகனங்கள் அனுராதபுரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், நிதிக்கூற்றுக்களில் குறித்த சொத்து ஒப்படைப்பு கணக்கிலிடப்பட்டிராததுடன், கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கும் இவ்வாகன விபரம் அறிவிக்கப்படவில்லை. | சொத்து ஒப்படைப்பு சரியாககவும் முறையாகவும் நடைபெற்றல் நிதி அறிக்கைகளில் அவற்றை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தின் படி 03 வாகனங்கள் அனுராதபுரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டபோதும் ஒப்படைப்பு இதுவரை கணக்கிலிடப்படவில்லை எதிர்காலத்தில் இது நாளதுவரையாக்கப்படும். |
| (iv) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கைப் பிரகாரம், திணைக்களமானது வாடி வீடுகள், உத்தியோகபூர்வ மனைகள், சுற்றுலா பங்களா, அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமாக கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்குச் சமர்ப்பித்த நிதிச் சார்பற்ற சொத்துப் பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் அவற்றின் பெறுமதி என்பவற்றுக்கிடையே ரூபா | நிதிச் சார்பற்ற சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டு அதற்கமைய வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | இச்சொத்துக்கள் காணியாக ரூபா 19,615, சுற்றுலா பங்களாவாக ரூபா 36,500 அலுவலகக் கட்டிடமாக ரூபா 6,950 என நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 3,615,000 கூட்டுத் தொகையுடைய வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | | |
| (v) | குறித்த சுற்றறிக்கைப் பிரகாரம் திணைக்களம் திறைசேரிக்குச் சமர்ப்பித்த நிதிச் சார்பற்ற சொத்துப் பதிவேட்டில் உள்ள ரூபா 5,600,000 பெறுமதியுடைய வாகனம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | நிதி சார்பற்ற சொத்துப் பதிவேட்டினை நாளது வரையாக்கப்பட வேண்டும். | நிதிசார்பற்ற சொத்துப் பதிவேடு எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்படும். |

**(ஈ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------------------ | --------------- | -------------------------------- |
| நிலையான சொத்துப் பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 2009 செப்டம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேண வேண்டுமாயினும், காணியும், கட்டிடங்களும், இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும், அலுவலக உபகரணம், இலத்திரனியல் உபகரணம், ஊடக உபகரணம், வீட்டுத் தளபாடம், தொழில்நுட்ப மற்றும் தொழல்நுட்ப உற்பத்தி உபகரணம், நிர்மாண உபகரணம், கமத்தொழில் உபகரணம், பாற் பண்ணை உபகரணம் என்பவற்றின் பொருட்டு நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கைப் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டவாறுள்ளது |

**(உ) கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய சான்றுறுதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் திணைக்களத்தில் நிதிக்கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்துப் பேணுவதைச் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் பலனை மீளாய்வு செய்து அதற்கமைய முறைமையை பலன் வாய்ந்ததாக அமைப்பதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதுடன் அம்மீளாய்வின் எழுத்து மூலப் பிரதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அப்பிரதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். | எதிர்காலத்தில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஊ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 822,765 | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு அருகதையுடைய உத்தியோகத்தர்கள் பௌதீக எரிபொருள் நிதி ஏற்பாடாகக் கோரலாகாது. வெளி இடங்களில் கடமை புரிவதற்கு அமைச்சினது செயலாளரது அங்கீகாரத்துடன் தொகுதிப் | குறித்த சுற்றறிக்கை க்கு இணங்க வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

போக்குவரத்து வசதி பெறப்பட்ட போதும், மீளாய்வாண்டின் போதும், திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மேலதிக எரிபொருளின் அளவு அவ் உத்தியோகத்தருக்கு ஓராண்டிற்குரிய சாதாரண எரிபொருள் படியை விட 4 மடங்குகளுக்கும் மேலானது என அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமானமுகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சுற்றுலா பங்களாக்களில் தங்குவதன் பொருட்டு திணைக்களம் அறவிட வேண்டியிருந்த மொத்த வருமான நிலுவை ரூபா 346,200 ஆகும். அதில் மீளாய்வாண்டினது நிலுவை ரூபா 83,300 ஆகும். எஞ்சிய ரூபா 262,900 வரையான நிலுவை 1 முதல் 5 ஆண்டுகள் வரையிலானவை. மீளாய்வாண்டு இறுதியில் மொத்த வருமான நிலுவையில் 98 சதவீதமான ரூபா 340,200 சனாதிபதி செயலகத்திலிருந்து பெறப்பட வேண்டியிருந்தது. | வருமான நிலுவை அறவீடு வினைத்திறனுடன் நடைபெற வேண்டும். | எஞ்சிய தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டில் போதிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாது 05 செலவின விடயங்களுக்கு நி.பி 66 மாற்றத்தின் மூலம் 30 முதல் 100 சதவீதம் வரை நிதியேற்பாடு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டை சரியாக தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் இயன்றளவு பிழையின்றி வருடாந்த மதிப்பீடு தயாரிப்பேன். |
| (ஆ) | வாகனப் பராமரிப்புச் செலவினம், ஏனைய செலவினம், அரச கரும மொழிக் கொள்கையை அமுலாக்குதல், இயந்திரங்களதும் இயந்திர சாதனங்களதும் புனரமைப்பு மற்றும் இயந்திர சாதனச் சுவீகரிப்பு தொடர்பான நிதியேற்பாட்டில் 40 முதல் 100 சதவீதம் எஞ்சியிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டை சரியாக தயாரிக்க வேண்டும். | வரவு, செலவு திட்ட 07/2019 ஆம் இலக்கத்தின் மூலம் ஆண்டின் இறுதியில் செலவினத்தை முகாமைத்துவ செய்யுமாறு கோரப்பட்டதால் குறித்த பணிகள் நடைபெறவில்லை. |
| (இ) | உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி தொடர்பாக திணைக்களத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதி ரூபா 47,554,000 ஆகும். எனினும், மீளாய்வாண்டின் போதும் ரூபா 4,881,424 மாத்திரமே செலவழிக்கப்பட்டிருந்தது மொத்த நிகர நிதியேற்பாட்டின் 90 சதவீதமாகிய ரூபா 42,672,576 எஞ்சியிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டை சரியாக தயாரிக்க வேண்டும். | வனப் பாதுகாப்புத் திணைக்களம் காணியை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் திட்டமிட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ள இயலாது போனது. |

## 2.3 பொறுப்புக்களும் கடப்பாடுகளும் ஏற்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 115(2) க்கமைய முன்னைய ஆண்டின் டிசம்பரில் கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றை தவிர்க்க முடியாத நிலைமையில் மாத்திரமே அடுத்து வரும் ஆண்டின் மார்ச் மாதத்திற்கு முன்னர் கொடுப்பனவு செய்யலாமெனினும், 2019 ஆம் ஆண்டின் பொறுப்பாக குறிப்பிடப்பட்ட ரூபா 201,673 கூட்டுத்தொகைச் செலவினம் 2020 மார்ச் இறுதியிலும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது. | குறித்த நிதிப்பிரமாணப் படி கடப்பாடுகள் ஏற்படுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் என்பன நடைபெற வேண்டும். | மீளாய்வாண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 115(3) க்கு இணங்காத விதத்தில் 2019 மார்ச் மாதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த பணமாகிய ரூபா 175,950 திருப்பிச் செலுத்தப்படுவது மீளாய்வாண்டில் நடைபெற்றிராததுடன், 2020 சனவரி மாதத்தில் அப் பணம் வழங்குனருக்கு செலுத்தப்பட்டது. எனினும், 2019 ஆம் ஆண்டில் அது பொறுப்பாகக் கணக்கிலிடப்பட்டிருக்கவுமில்லை. | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கடப்பாடு நடைபெறாது கொடுப்பனவு நிகழ வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவு பூர்த்தியாகியது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொலைபேசிச் செலவினம் ரூபா 29,906 ஆகியபோதும், 2020 மார்ச் இறுதியளவில் முன்னைய ஆண்டிற்கான தொலைபேசிச் செலவினமாக ரூபா 30,862 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கடப்பாடும் வருடாந்தச் செலவினமும் நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் கணக்கிலிடப்பட வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கிய நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கதிர்காமம் பூஜா நகர அபிவிருத்திச் செயற்திட்டம், அரச வெசக் உற்சவம் மற்றும் என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா கண்காட்சி என்பவற்றிற்குத் திணைக்களத்திற்கு வேறு அமைச்சுக்களிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் முறையே ரூபா 60,078,849, ரூபா 257,908, ரூபா 115,431 அதாவது 60 சதவீதம், 56 சதவீதம், 12 சதவீதம் என சேமிப்புக்குள்ளாகியிருந்தது. | சரியாகவும் முற்றாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அப்பணிகள் நிறைவேறாது ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |

## 2.5 முற்பண வழங்கலும் தீர்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2019 ஆம் ஆண்டில் வழங்கிய ரூபா 16,000 கூட்டுத்தொகை யையுடைய இடைக்காலக் கட்டு நிதியை தீர்வு செய்வதற்கு 1 ½ முதல் 4 மாதங்கள் ஆயின. | முற்பணக் கட்டுப்பாடு முறையாக அமைய வேண்டும். | இயன்றளவு சரியாக முற்பணம் வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகின்றது. |
| (ஆ) மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 24,000 முற்பணமானது ஏறக்குறைய 10 நாட்களாக எதற்கும் பயன்படுத்தப்படாது திருப்பி அளிக்கப்பட்டிருந்தது. | முற்பணக் கட்டுப்பாடு முறையாக அமைய வேண்டும். | பகுப்பாய்வு செய்யப்பட்டு இயன்றளவு சரியாக முற்பணம் வழங்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்திட்டம் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அனுராதபுரம், லோஞ்சஸ்வெல செயற்திட்டத்தின் கீழ் 05 உப பணிகளுக்கு ரூபா 45 மில்லியன் நிதிஏற்பாடு | செயற்திட்ட நடவடிக்கை துரிதமாக்கப்பட வேண்டும். | செயற்திட்டக் காணியின் சட்ட ரீதியான உரித்து பெறப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைய திட்டமிடப்பட்ட அப்பணிகளுள் செயற்திட்ட அலுவலக நிர்மாண வேலை மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டு பௌதீக முன்னேற்றம் 70 சதவீதமாக இருந்தது. | | |
| (ஆ) | கதிர்காமம் பூஜா பூமியில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 08 நிர்மாண வேலைகளுள் வடக்கு நுழைவாயில், செயற்திட்ட அலுவலக நுழைவாயில், கிரிவெஹர நுழைவாயில் என்பவற்றின் அருகே வசதிகளுடனான 03 கட்டிடங்களின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டு இறுதியளவில் முடிவடைய இருந்த போதும், அவற்றின் செயல் முன்னேற்றம் 70 சதவீதம் மாத்திரமே ஆகவிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கை துரிதமாக்கப்பட வேண்டும். | பொலிஸ் காவலரன் 04 மற்றும் பாதுகாப்பு வேலி என்பனவற்றின் நிர்மாணிப்பு நிறைவடைந்துள்ளன. |

**3.2 பொருட் கொள்வனவு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பௌதீக திட்டத்தின் அச்சிடல் வேலை மற்றும் ஏனைய கூட்டங்களுக்கு பொருட் கொள்வனவுத் திட்டத்தில் ரூபா 05 மில்லியன் நிதியேற்பாடு | பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்தலும் அமுலாக்கலும் முறையாக அடைய வேண்டும். | பௌதீக திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டபோதும், மீளாய்வாண்டில் அப்பணிகள் நடைபெறவில்லை. | | |
| (ஆ) | 2019 வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தில் பதவியணிப் பயிற்சிக்கு ரூபா 750,000 மற்றும் கதிர்காமம் பூஜா பூமியில் வாகனத் தரிப்பிட நிர்மாண வேலை என்பவற்றிற்கு 12.5 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், மீளாய்வாண்டு இறுதிவரை அப்பணிகள் ஆரம்பமாகவில்லை. | பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்தலும் அமுலாக்கலும் முறையாக அடைய வேண்டும். | பௌதீக திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது பெயர்ப் பலகை தயாரிப்புக்கு ரூபா 222,300 செலவிடப்பட்டிருந்தது. எனினும், பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் அது உள்ளடக்கப்படவில்லை. | பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்தலும் அமுலாக்கலும் முறையாக அடைய வேண்டும். | பௌதீக திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |